பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
## VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ/1870)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 16 திங்கட்கிழமை 30-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 131

## அக்கினிச்சுவாலை அணைந்தது

# சமாதானபேச்சிற்குவருமாறு புலிகளுக்கு அரசு அழைப்பு!

## நிலைமைகளை விளக்கி தகவல்தொடர்பு அமைச்சு அறிக்கை

(நமது நிருபர்)

**தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளை பெற்றுக்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் சமாதான பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும்.**

**சமாதானத்திற்காக தற்போது கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்றும், அவர்கள் பேச்சுவார்த்தைக்கு முன்வருவார்கள் என்று அரசு நம்பிக்கைகொண்டுள்ளதாக தொடர்பு சாதன அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழீழவிடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை நீடிப்பதில்லை என்று அறிவித்த 5 மணிநேர இடைவெளிக்குப் பின் முப்படைகளினாலும் ஆரம்பிக்கப்பட்ட அக்கினிச்சுவாலை 1 படை நடவடிக்கை பெருமெடுப்பில் விடுதலைப் புலிகளினால் வெற்றிகரமாகமுறியடிக்கப்பட்டதை அடுத்து படைகள் தமது முன்னைய நிலைகளுக்கு திரும்பிய பின் சமானத்தின் தேவையை வலியுறுத்தி மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமாறுஅரசாங்கம்விடுதலைபுலிகளுக்கு இவ் அறிக்கை மூலம் அழைப்பு விடுத்துள்ளது.

தகவல் தொடர்பு அமைச்சினால் விடுக்கப்பட்ட 18 பக்கங்களைக்கொண்ட இந்நீண்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

சமாதானத்திற்கான தருணம் தற்போது உருவாகியுள்ளது. இதிலிருந்து விடுதலைப் புலிகள் நழுவாது இதய சுத்தியுடன் சமாதானப் பேச்சிற்கு முன்வரவேண்டும்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

# அக்கினிச்சுவாலை படை நகர்வில் படையினருக்கு பாரிய உயிரிழப்பு!

### யுத்தமுனைக்கு சென்ற இக்பால்அத்தாஸ் பேட்டி

[கொழும்பு]

இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட அக்கினிச்சுவாலை ஒன்று படை நடவடிக்கைக்கு அரசின் அழுத்தம் இருக்கவில்லை. அதே வேளை தேசிய பாதுகாப்புக் கவுன்சிலிலும் அதுபற்றி அறிவுறுத்தல் விடப்படவில்லை.

இவ்வாறு இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி.பி.சியின் சந்தேசியசேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். அக்கினிச்சுவாலை படைநடவடிக்கையை யுத்தமுனையில் இருந்து நேரடியாக நிலைமைகளை அவதானித்து இக்பால் அத்தாஸ் அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

படையினரால் மேற்கொள்ளப்பட்ட அக்கினிச்சுவாலை நடவடிக்கை ஒழுங்கான முறையில் திட்டமிடப்படாததனாலேயேபெரும்தோல்வி கண்டது.

படையினரில் 1600ற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் அனேகர் கால்களை இழந்துள்ளதுடன் 250பேர் பலத்தகாயமடைந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இராணுவத்தால் முன்னேற முடியாமல் போனது ஏன் எனக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த இக்பால் அத்தாஸ் விடுதலைப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# பூநகரியில் விமானத் தாக்குதல் பல்கலை. மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து அரச விமானப்படை நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல், ஏதிலியான மக்கள் மீது மேற்கொள்ளும் காடைத்தனத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதென யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வாழ்ந்து வரும் அப்பாவிப் பொதுமக்கள் கடந்த 10வருடங்களுக்கு மேலாக மிக மோசமான பொருளாதாரத்தடையினால்

→ 8ஆம் பக்கம் பார்க்கக்க

## மேலும் 26 சடலங்கள் புலிகளால் ஒப்படைப்பு

அக்கினிச்சுவாலை 1, இராணுவ நடவடிக்கையின்போது பலியான இராணுவத்தினரின் சடலங்களில் நல்ல நிலையிலுள்ள மேலும் 26 சடலங்களை விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை கிளிநொச்சியில் வைத்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

புலிகளால் இதுவரை 56 படையினரின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-05)

## சடலம் ஒப்படைப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் திருகோணமலை இராணுவ முகாமைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் குணதிலகவினுடையதென அடையாளங் காணப்பட்டுள்ளது.

இச்சடலம் மட்டக்களப்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட வேளை படையினரது சடலம் இல்லையென முன்னர் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது இச் சடலம் இனங்காணப்பட்டதையடுத்து படையினர் பொறுப்பேற்றுள்ளனர். (ந-5)

## அக்கினிச்சுவாலையில் 240 படையினர் பலி 83பேரைக் காணவில்லை

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை அதிகாலை ஆரம்பிக்கப்பட்ட அக்கினிச்சுவாலை என்ற படை நடவடிக்கையில் 240 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், ஐந்து அதிகாரிகள் உட்பட 83 படையினர் காணாமல் போயுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

காணாமல் போன படையினரில் 56 படையினரின் சடலங்களைப் புலிகள் ஒப்படைத்துள்ளதாகவும், 27 பேரின் தகவல்கள் தெரியவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## அன்னையர் தினத்தில் கொழும்பில் ஆர்ப்பாட்டம்
### பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் மெனக் கோரி, அடுத்த மாதம் 14 ந் திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை படையினர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் நடத்த திட்டமிட்டுள்ளது.

அன்னையர் தினத்தன்று நடைபெறவுள்ள இவ் ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் பாதயாத்திரையொன்றும் நடத்தப்படுமென்று சங்கத்தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களையும், புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரையும் இரு தரப்பினரும் விடுதலை செய்யவேண்டுமென சங்கம் கோருவதாகவும் நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

அக்கினிச் சுவாலை-1 முறியடிப்புச் சமரின்போது உயிரிழந்த மேலும் 22 பேரின் பெயர் விபரங்களை புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

- புரட்சிமாறன் (முருகையா வசந்தகுமார் விசுவமடு)
- கிருபா (அந்தோனிப்பிள்ளை ஜபாமணி - முல்லைத்தீவு)
- தீபன் / தமிழரசன் (நமசிவாயம் சந்திரமோகன் - மட்டக்களப்பு)
- மதி (பீற்றர்பிள்ளை பிரதீபன் - யாழ்ப்பாணம்)

(8ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சோல் ஹெய்ம் இன்று கொழும்பு வருவார்?

இலங்கை இனப் பிரச்சினையில் சுமுகமானதொரு தீர்வினைக் காண்பதற்காக புலிகளுக்கும் அரசுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம்இன்று கொழும்பு வருவாரென எதிர் பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் கடந்த 4 மாதங்களாக நீடிக்கப்பட்டுவந்த யுத்த நிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து எரிக்சோல் கொழும்பு வருகை முக்கியத்துவம் வாய்ந்தாக அமைந்துள்ளது.

## நவாலியில் துப்பாக்கிச்சூடு


(யாழ்ப்பாணம்)

நவாலியில்நேற்றுப் பிற்பகல் வேலக்கைப் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றதாக தெரிய வருகிறது.

## வடபகுதி வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு
## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின்

# மேதின அறைகூவல் - 2001

### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!



கடந்த இரு தஸாப்தங்களாக தொடர்கின்ற யுத்தம், அழிவுகளையும் அவலங்களையுமே எமக்குத் தந்துள்ளது இழந்து போன எமது அரசியலுரிமைகளில் எதனையும் இதுவரை கால யுத்தம் பெற்றுத்தரவில்லை. மறுதலையாக எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை சிதைத்துள்ளது. அநாதைகளான சிறுவர்கள், விதவைகளான இளம் பெண்கள், கவனிப்பாரற்ற முதியவர்கள், அகதிகளாக அலையும் அவல வாழ்வு, வேலைவாய்ப்பின்மை, மற்றும் சீர்குலைந்துள்ள பொருளாதாரம் என்பவற்றினால் தமிழ் பேசும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கண்ணீர் சிந்தும்நிலை.

### ஏன் இந்த அவலம்? எதுவரை இந்த அவலத்தினை தொடர அனுமதிப்பது?

யுத்த அவலத்துக்குள்ளும், அரசியல், அன்றாடப் பிரச்சினைக்குள்ளும் சிக்கிச் சீரழியும் எமது மக்களுக்கு அரசியல் அபிலாசை நிறைவேறிட, யதார்த்த பூர்வமான அரசியல் பாதையில் மாற்று வழியில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளுக்கு ஊடான நிரந்தரச் சமாதானத்தையும் கௌரவமான அரசியல் தீர்வையும் நோக்கி ஈ. பி. டி. பி செல்கின்றது.

எம் இனிய தமிழ் பேசும் மக்களே, நிரந்தரச் சமாதானத்திற்காக நிம்மதியான வாழ்விற்காக ஈ. பி. டி. பி உடன் அணி திரளுங்கள்!

இந்த வகையில்

- ☆ வடக்கு கிழக்கு என எக்காலமும் பிரிக்கப்படாத ஈழமாநிலத்தில் விசேட அதிகாரங்களுடன் பூரண சுயாட்சி
- ☆ மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!!
- ★ இயல்பு வாழ்வை மீளக்கட்டியெழுப்பிட, அபிவிருத்தி, புனர் வாழ்வு, புனரமைப்பு பணிகளை முன்னெடுப்போம்!
- ★ வீராவேச வார்த்தைபேசும் வேடிக்கை அரசியலை நிராகரிப்போம்!
- ☆ தற்கொலைப்பாதையை நிராகரிப்போம்!
- ☆ மாற்றுவழியில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளுக்குஊடாகநிரந்தரசமாதானத்தையும்கௌரவமான அரசியல் தீர்வையும் நோக்கி நடைபோடுவோம்!

என ஈ. பி. டி. பி தனது மேதின அறைகூவலை விடுக்கின்றது

**உழைப்பவர் உரிமைகளை நிலைநாட்ட தளராது உழைப்போம்!**
**தேசத்திற்காக தியாகங்கள் ஏற்போம்!**
**என்றும் நாம் மக்களின் நண்பர்கள்!**

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி)

2959

## சிறு விளம்பரம்

### தொலைபேசி இயக்குனர் தேவை

ஆனைக் கோட்டையில் இயங்கும் தொலைபேசி நிலையத்திற்கு இயக்குனர் [பெண் பிள்ளை] தேவை .நவாலி, மானிப்பாய், ஆனைக் கோட்டையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். மே/பா: 114, வலம்புரி, யாழ்ப்பாணம். [2955]

# பணியினால் உயர்வு பெற்ற பண்பாளர்

# பேரறிஞர் லோங் அடிகள் புகழ் ஓங்குக

## (லோங் அடிகளாரின் நினைவு தினம் இன்றாகும்)

யாழ்.நகரின் கிழக்குப்பகுதியில் புனிதமரி அன்னை பேராலயத்துக்கு முன்னால் ஒரு மாபெரும் குன்று.

அதில் அணையாத கல்வித் தீபம் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அதுதான் ஈழக்கல்வி வரலாற்றிலே புகழ்பூத்த கல்வி அன்னை புனிதபத்திரிசியார் கல்லூரி.

அதனை உருவாக்குவதற்கு கல்வி மான்கள் பலர் பூரண அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தார்கள். அவர்களுள் தலைசிறந்த கல்விமான் மத்தியூஸ் அடிகளின் சீடரான பேரறிஞர் T.M F லோங் O.M.I, M.A, (Cantab) அடிகள், இன்று (30.04.2001) இவர் இறைவனடி சேர்ந்த 40ஆவது ஆண்டு தினத்தில் நாம் நன்றிப்பெருக்குடன் நினைவு கூருவோம்.

### முத்திரை வெளியீடு

இவரின் மாபெரும் பணிக்கு இலக்கணமாக இலங்கை அரசு 22.05.1990 இல் முத்திரை வெளியீட்டு கௌரவித்தது.

இலங்கைக் கல்வி வரலாற்றிலே இக்கல்லூரி பலதுறைகளில் பலசாதனைகள் ஈட்டித்தனித்துவம் பெற்றிருந்தது வெள்ளிடைமலை.

### ஆளுமை

பேரறிஞர் பிதா லோங் அடிகளின் தனிவாழ்வை ஆராய்ந்தால் அதனைப் பெரும் காவியமாக, உன்னத ஓவியமாக, ஏன் பேரிலக்கியமாகவும் சமைக்கலாம்.

### கல்விக்கு முக்கியத்துவம்

இவர் அன்றைய அரசியல், சமூக, பொருளாதார நிலையில், யாழ் மக்களின் தனிப் பெருஞ் சொத்தாகக் கல்வி திகழ, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கினார்.

உரை கல்விற் சரிபார்த்த செம்பொன்மேனி, உயர்ந்த தோற்றம், நிமிர்ந்த நன்நடை, ஒளிபொழியும் நீல மணிக் கருணைக்கண்கள், தூயமலர் போலும் ஏழில் முகம்.

இரத்தினச் சுருக்கமாகக் கூறின் லோங் அடிகள் தோற்றத்திலே இமயமலை, தொண்டிலே மெழுகுவர்த்தி, ஆற்றிலே மின்கணனி அன்பிலும் அருளிலும், பண்பினிலும்வழி நடத்தலிலும் குன்றிலிட்ட ஞானத்தீபம்.

பிதாலோங் அடிகளால்உருவாக்கப்பட்ட மாணவப்பரம்பரைகள் ஈழ நாட்டில் மட்டுமன்று அகிலமெங்கும் சுடர்விட்டுப்பிரகாசிக்கும் தீபங்களாகத் திகழுகிறார்கள்.

### உத்தமகுரு

இவர் 1896 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 22 ஆம் நாள் அயர்லாந் நாட்டிற் பிறந்து, கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஆன்மீகத்திலும் உயர்ந்து, உத்தம குருவாக தன் வாழ்வை அர்ப்பணித்து 33 வருடம் யாழ். மண்ணில் மாபெரும் பணியாற்றினார்;

யாழ் நூலகம்தென்கிழக்காசியாவின் முடி மணியெனத் திகழ அன்று பிதாலோங் அடிகள் மேற்குலக நாடுகளுக்குச் சென்று, தமது தொப்பியை நீட்டி, யாசகம் செய்து நற்கைங்கரியத்திற்காக ஒரு கோடி நிதியத்தைதிரட்டி ஒப்படைத்தார். 1.6.1981 ல் நடு இரவில் அரச படையினரால் யாழ். நூலகம் எரிக்கப்பட்டு, விலைமதிப்பற்ற 97,000 நூல்கள் நாசமாகின. இதனை அறிந்ததும் பன்மொழிமேதை தாவீது அடிகள் உயிர்துறந்தார்.

யாழ். நூலக நுழைவாயிலில் பிதா லோங் அடிகளின் யுள்ளார்

### பலாலி விமானத்தளம்

யுத்த காலததில் றோயல் விமானப்படை ஓடுதளமாகப் பாவிக்கப்பட்ட பல லிவிமானத்தளத்தை சிவில விமானத் துறையாக மாற்ற உழைத்த பெருமகனார் லோங் அடிகள்.

### யாழ் மகனாக வெளியேறல்

1954இல் பிதாலோங் அடிகள் திருப்பணியாற்ற திடீரென அவுஸ்திரேலியா புறப்படுமுன், யாழ். முற்றவெளியில் மாபெரும் சன சமுத்திரம் திரண்டு, அடிகளுக்கு பிரியாவிடையும் நன்றி நவிலும் விழாவும் கோலாகலமாக நடைபெறும் வேளை அவரின் இறுதிக் கூற்று 'நான் எங்கிருந்தாலும், யாழ். மகனாக வாழ்வேன்' என்று கண்ணீர் வடித்தார். 30-04-1961இல் அடிகளின் மறைவினால் நிரந்தரக்

துரை ஆரோக்கியதாசன்
BA. Dip. In Edu.
முன்னாள் பிரதி அதிபர் பலாலி ஆசிரியர் கலாசாலை

அசையாத சிலை எரிந்த பின்னும், சரிந்த பின்னும் இன்றும் காத்து நிற்கிறார் சிலையைப் புனரமைப்பது எம் பணியாகும்.

### யாழ் மண்மீது அதீதப்பற்று

தமிழ் மக்கள்மீது லோங் அடிகள் கொண்டதீராத காதலைப் பிரபல்யம் வாய்ந்த நகைச்சுவை ஓவியம் வரையும் கொலெற் (COLLE TTE) அன்றைய பிரபலயமான ஆங்கில தினசரி ஏட்டிற் (DALYNEWS) கேலிச்சித்திரமாக லோங் அடிகளைக் கருப்பொருளாகக்கொண்டு சுவாமியின் தலையில் தமிழருடைய தலைப்பாகையும், கையில் குடையும் வாயில் யாழ்ப்பாணச் சுருட்டும், வேட்டியும், சால்வையும் அணிந்துகொண்டு கொட்டும் மழையில, பலாலி விமான நிலையத்தில் விமானத்திலிருந்து இறங்குவதாக தீட்டி

கண்ணீர் ஆகிவிட்டது.

### எம் கடன்

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது அகவையின் பொழுது பிதா லோங் ஞாபகார்தத மூன்று மாடி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பத்திரிசியார் குடும்பத்தினருக்கும் ஏனைய நலன் விரும்பிகளுக்கும் அன்பின் வேண்டுகோள். பிதாலோங்மண்டபம் பூர்த்தி பெற ஒவ்வொருவரும்கடுகளவு நிதி காணிக்கையாக செலுத்தினல், 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பதிற்கு ஏற்ப, நிதி குவியும், கட்டடம் உருவாகும். எம் எதிர்கலச் சந்ததியினர் அமைதியான சூழ்நிலையில் கல்வியை நிறைவாகவும் பெற்று இன்புற்று பணி தொடர வழிபிறக்கும்

பிதா நெடியோன் வாழ்க.

# வாள்முனை..

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாகத் தங்கியது.

1830 வாக்கில் இங்கிலாந்தின் பேர்மிங்காம் பகுதியைச் சேர்ந்த எஃகுத் தயாரிப்பாளர்கள், பெருமளவில் எஃகு நிப்புகளை உருவாக்கி விற்பனை செய்தார்கள். அடுத்த கால் நூற்றாண்டில் இறகுப் பேனாக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன; வெறும் எஃகில் மட்டுமல்லாது, இரிடியம் சேர்ந்த கலப்பு உலோகங்களைக் கொண்டு, நீடித்து நன்கு உழைக்கும் நிப்புகள் தயாரிக்கப்பட்டன.

### பவுண்டன் பேனா

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், 'பவுண்டன் பேனா' என்று சொல்லப்படும் ஊற்றுப் பேனாக்கள் தோன்றின. ஆரம்பத்தில் இதற்குப் பெயர் பவுண்டன் பேனா அல்ல. நீர்த்தேக்கத்தை ஆங்கிலத்தில் 'ரிசர்வயர்' என்று சொல்கிறோமல்லவா? அதுபோல மை தேக்கி வைத்திருந்த இந்தப் பேனா ரிசர்வாயர் பேனா (ReServoir Pen) என்று அழைக்கப்பட்டது. ஆரம்ப காலப் பவுண்டன் பேனாக்களில் மை கசிவு அதிகம். முனையில் மை கட்டியாக உறைந்து தொடர்ந்து எழுத முடியாமல் போய்விடும். இன்னும் இதுபோன்ற சிறு சிறு குறைகள் இருந்தன. இந்தக் குறைகள் அனைத்தும் களையப்பட்டு ஓரளவு ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் முதல் பவுண்டன் பேனாவை உருவாக்கியவர் எல்இவாட்டர்மென்; அமெரிக்காவைச் சேர்ந்த இவர் 1884 இல் இந்தப் பேனாவை உருவாக்கினார். இந்தப் பேனாவில் நாம் மையை ஊற்ற வேண்டும். 1913 வாக்கில் தானாகவே மை உறிஞ்சிக் கொள்ளும் பேனாக்கள் வந்தன. பேனா முனையை மைக்குள் விட்டு இதில் உள்ள ரியூப்பை அமிழ்த்தினால் போதும் ரியூப்பில் உள்ள காற்று வெளியேறி அந்த இடத்தை மை நிரப்பிக் கொள்ளும்.

### விலையுயர்ந்த பேனாக்கள்

இப்போதுங் கூட பவுண்டன் பேனாக்களில் இத்தகைய ரியூப் உள்ள பேனாக்களே மிகுதியாகத் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பேனா விற்பனைக்கு வந்த புதிதில் இதற்கு ஒட்டோமெட்டிக் பேனா என்று பெயர். இருபதாம் நூற்றாண்டின் முதல் 50 ஆண்டுகள் பவுண்டன் பேனாவே தனிக்காட்டு இராஜாவாகத் திகழ்ந்தது. விதம் விதமான பேனாக்கள் உருவாக்கப்பட்டன. தங்கம்- பிளாட்டினம் போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் பேனாத்தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டன. வைரம், மரகதம் என்று விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பேனாக்களும் தயாரிக்கப்பட்டன. கோடீஸ்வரர்கள் வாங்க வேண்டும் என்பதற்காகவே குறைந்த எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்ட விலையுயர்ந்தபேனாக்களும் உண்டு. இன்றும்கூடக் கலை நயம் மிகுந்த இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பேனாக்கள் தயாரிக்கப்படுகின்றன. பார்க்கர், மோன்ட்பிளால், கார்ட்டியா, லெப்பெப்வர் என்று ஏராளமான நிறுவனங்கள் விலையுயர்ந்த பேனாக்களைத் தயாரித்து வருகின்றன.

### போல் பொயின்ட்

பவுண்டன் பேனாவுக்குச் சரியான போட்டி: இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்டது. ஹங்கேரியைச் சேர்ந்த லாடிஸ்லாவ் ஜார்ஜ் பைரோ சகோதரர்கள் போல் பொயின்ட் பேனா எனப்படும் பந்து முனைப் பேனாவை 1938 இல்உருவாக்கினார்கள். போர் கடுமையானதைத் தொடர்ந்து அவர்கள் ஆர்ஜென்டீனாவுக்குக் குடிபெயர்ந்தார்கள். அங்கு 1944 இல் போல் பொயின்ட் பேனாவை மேலும் மேம்படுத்தினார்கள். பூமிக்கு மேலே அதிக உயரத்தில் விமானப் படைவீரர்கள் பயன்படுத்த இதுவே மிகச் சிறந்த பேனா என்று ஆர்ஜென்டீனாவுக்கு வந்த இராணுவ அதிகாரி ஒருவர் உணர்ந்தார். ஏராளமான பேனாக்களை வாங்கிச் சென்றார். இதன்பின் நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்குப் போல் பொயின்ட் பேனாக்களின் விற்பனை கிடுகிடு என்று உயர்ந்தது.

இப்போதுபோல்பொயின்ட் பேனாக்களே மிகவும் பயன்படுத்தப்படுகின்றன. பவுண்டன் பேனாக்களின் ஆதிக்கம் குறைந்து விட்டது. தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 300 கோடி போல் பொயின்ட் பேனாக்கள் தயாரிக்கப்படுகின்றன. பல நாடுகளில் உருவாக்கியவர்களின் பெயரால் 'பைரோ' என்றே குறிப்பிடுகிறார்கள்.

### ரோலில் போல் பேனா

பவுண்டன் பேனா, போல் பொயின்ட் பேனா தவிர, இப்போது மூன்றாவதாக ஒரு பேனா முளைத்திருக்கிறது. போல் பொயின்ட பேனா போன்ற முனை பவுண்டன் பேனா போல் மை வெளிவரும் வசதி- இதுவே இந்தப் பேனாவின் தனிச்சிறப்பு. நீடித்து உழைக்கும் போரஸ் முனை கொண்ட (Porous Tip) கொண்ட இந்தப் பேனா 1940 வாக்கில் முதன் முதலில் உருவாக்கப்பட்டது; ஆனால் சமீப ஆண்டுகளில் பலரும் பயன்படுத்தும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது, இதன் இப்போதைய பெயர் ரோலிப் போல் பேனா அல்லது ரோலர் பேனா:

கம்பியூட்டர் யுகத்தில், ஃபேக்ஸ் மெஷின், இமெயில் ஆன்சரிவ் மெஷின் என்று போட்டி சாதனங்கள் ஏராளமாக முளைத்த போதிலும் அவற்றால் பேனாவின் மதிப்பை- அருமையை- சிறப்பை வீழ்த்த முடியவில்லை.

# புதிய கல்விக்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

### பாடசாலை மாணவர்களைப் பாதுகாத்தல்

மாணவரின் உடல், உள, துஷ்பிரயோக தண்டனை, பாலியல் தொல்லைகளைப் பாதுகாக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்துதிட்டம்ஒன்று தயாரிக்கப்படுகின்றது.

மாணவருக்கு மதுபானம், புகையிலை என்பவற்றால்ஏற்படும் தீமைகள் பற்றி விழிப்புணர்வுஏற்படுத்திஅறிவூட்ட தேசியமட்டத்தில்ஜனாதிபதி செயலகத்தில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

### வலயக் கல்விப் பணிமனைகளை அபிவிருத்தி செய்தல்

வலயக் கல்வி உத்தியோகத்தர்களின் சேவைகளை மேம்பாடடையச் செய்து வழங்குவதற்கு கல்வி அமைச்சு ஒரு தொடர் ஒழுங்கு படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலை உருவாக்கியுள்ளது.

நாடுமுழுவதும்(8மாகாணங்களிலும்) 91 வலயங்களிலும் உள்ள 91 வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஏன் சில வேளைகளில் மாணவர்களின் பெற்றோருடனும் ஆரம்பத் தொடர்புகளைக் கொண்டுள்ளனர்: நாட்டின் கல்வித் துறை ஆட்சிப் பணியில் ஒரு முக்கியமான செல்வாக்கை வலயக் கல்விப் பணிமனை கொண்டுள்ளது. இப்படியான ஒரு வலயம் அண்ணளவாக 100 பாடசாலைகளைக் கொண்டு கல்வி அமைச்சுக்கும் பாடசாலைக்கும் தொடர்புப் பாலமாக சுற்றறிக்கைகள், புதிய திட்டங்கள், கொள்கைகள் என்பவற்றைப் பரப்பும் பணியைக் கொண்டுள்ளது. ஆசிரியர் சேவைப் பதிவுகள் ஓய்வூதியக் கணிப்பீடு போன்ற பணிகளைப் பேணுமிடமாக விளங்குகின்றது

சேவைக்கால ஆலோசகர்கள் முதன்மை ஆசிரியர் போன்றோர் இங்கிருந்தே தமது பயிற்சித் திட்டங்களை வழங்கி நெறிப்படுத்தும் மைய நிலையமாக விளங்குகின்றது. பாடசாலைஅமைப்புக்கள் கல்விசார் நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் மத்தியஸ்தானமாக வலயக் கல்விப் பணிமனை முக்கிய பங்காற்றுகிறது. வலயக் கல்விப் பணிப்பாளர் குழுக்களுக்கான "சேவை மேம்பாட்டுப்" புதிய செயற் திட்டத்தை அபிவிருத்தி நிதிக் கடன் கூட்டுத்தாபன வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதித் தலைவர் தம்மிககலபுகே என்னும் ஆழ்ந்த ஞானமுடைய அனுபவமுடைய பயிற்றுவிப்பாளர் இச்செய்கையைச் செய்து வருகிறார். இத்தொடர்சேவையைக்கல்வி அமைச்சு வலயக் கல்விப் பணிமனைகளின் அபிவிருத்திக்காகத் தொடர்ந்து செய்து வருகின்றது. மனித வள அபிவிருத்தி பற்றியது, புதிய கல்விச் சீர்திருத்தத்தினை வெற்றிகரமாக அமுல் நடத்துவதில் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு உள்ள பிரச்சினைகள் பற்றிக் கல்வி அமைச்சு ஒவ்வொரு தவணையும் கலந்துரையாடலை நடத்துவதும் விசேட செயலமர்வுகளை வழிப்படுத்துவதும் இதன் தொழிற்பாடாகும்.

## மாணவிகள் மீது விசமிகள் தொல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உள்ள சில பெண்கள் பாடசாலைகளின் மாணவிகள் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் போது ஆண் மாணவர்கள் மற்றும் இளைஞர்களால் தொல்லைகளுக்குள்ளாவதாகப்பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத் தொல்லைச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தின் ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் அடிக்கடி நிலவுவதாகவும் இதனால் அப்பாடசாலை மாணவிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது கடமையினை மேற்கொண்டு வருவதினை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகவும் பொது மகன் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-2)

# மணற்காட்டில் தொடரும் மண் அகழ்வு

## அச்ச நிலையில் பொது மக்கள்

[செம்பியன்பற்று]

மணற்காட்டுப் பகுதியில் மீண்டும் சட்டவிரோதமாக மணல் அள்ளும் வேலை தொடங்கியுள்ளது. அதிகாலை முதல் மாலை வரை மணல் அள்ளுவதனை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு மணல் அள்ளுவதனால் இவ் வீதி வழியாகப் பயணஞ் செய்வோர் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மணல் ஏற்றிச் செல்லும் டிராக்ரர்களில் இருந்துவெளியேறும் தூசி, காற்றில் பறக்கும் மணல் என்பவற்றால், மக்கள் ஒருவிதஎரிவுநோய்க்கு ஆளாகுகின்றனர்.

இத்துடன் மணற்காட்டு வீதி திருத்தஞ் செய்யப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இப் பள்ளங்களில் கொட்டப்படும் மணல்களில் துவிச்சக்கரவண்டிகள் புதைபடுவதனாலும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்நிலை தொடர்ந்துசென்றால் வெகு விரைவில் இப்பிரதேசம் கடல் அரிப்பிற்கு உட்படலாம் என பொது மக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-42)

# கடற் றொழிலாளர்கள் உதவியின்றித் தத்தளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மாமுனை, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள கடற்றொழிலாளர்கள் எவ்வித உதவிகளுமின்றிக்கஷ்ட நிலையில் வாழ்க்கை நடத்துகின்றார்கள்.

இடம்பெயர்ந்துள்ள நிலையில் இவர்கள் தமது தொழிலைத் தொடர்வதற்குக் கூட வசதிகள் அற்ற நிலையில் ஜீவனம் நடத்திவருகின்றார்கள்.

(செ-43)

# முதியோர் இல்லத்தில் ஞாயிறுதோறும் பஜனை

(மல்லாகம்)

வடபிராந்திய சத்தியசாயி இளைஞர்கள் கடந்த 22 ஆம் திகதி மூளாயில் இயங்கும் வயோதிபர் இல்லத்திற்குச் சென்று முதியவர்களுடன் அளவளாவினர்.

அத்துடன் பஜனை நிகழ்ச்சி ஒன்றினையும் நிகழ்த்தியுள்ளனர். பிரதி ஞாயிறு தோறும் இவ்வாறு பஜனை நிகழ்வுகள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-122)

# வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 28ஆம் திகதி காலை மேற்படி கல்லூரியில் இடம் பெற்றது.

(க-104)

## கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தலைமையில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்றுகாலை 11.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

(செ-24)

★ ★ ★

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, பிரதேச செயலர் பிரிவு ரீதியாக, யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

(செ-24)

# சித்திரப் போட்டியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்கான சித்திரப் போட்டியும் கண்காட்சியும் எதிர்வரும்மே மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00மணிக்கு ஆரம்பமாகும். இப்போட்டியானது மாணவர்களுள் ஆசிரியர்களின்ஓவியத்திறனைமேம்படுத்தும் நோக்கோடு நடத்தப்படவுள்ளது.

அனைத்துஆங்கங்களும்காட்சிப்படுத்தப்படுவதுடன்சிறந்த ஆக்கங்களுக்கு சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

இப் போட்டிகள் ஆரம்பப் பிரிவு, கனிஷ்டபிரிவுசிரேஷ்ட பிரிவு, சிரேஷ்டஇடைநிலைப் பிரிவு. ஆசியர்களுக்கான போட்டி என்பன நடைபெறவுள்ளதாக உதவிக் கல்விப்பணிப்பாளர் த. இராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

(செ-10)

# தெல்லிப்பழையில் சைவத் தமிழ் நூலகம்

(கல்வயல்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திற்கு முன்பாக பல இலட்சம் ரூபா செலவில் சைவத்தமிழ் ஆய்வு நூலகம் ஒன்று சைவ அபிமானிகளால் உருவாக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் சைவத் தமிழ் பற்றி ஆய்வு செய்வோருக்கும், சமயத்துறையில் உயர் கல்வி பெறுவோருக்கும் இந் நூலகம் ஓர் வரப்பிரசாதமாக அமையும் என்று கல்வியாளர் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கலாநிதி தங்கம்மாஅப்பாக்குட்டியின் தலைமையில் இந் நூலகம் அமைக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-111)

# இலங்கை மாணவரின் தொழில்நுட்ப அறிவை வளம்படுத்த புதியதிட்டம்

(கொழும்பு)

இலங்கை மாணவர்கள் மிகச்சிறந்த தகவல் தொழில்நுட்ப அறிவைப்பெறும் நோக்குடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மூன்று வருடகாலத்திற்குரிய 'செயல் நோக்க ஆவணம்' என்ற உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

இவ் உடன்படிக்கையில் இலங்கையில் கணிசமானளவு தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்க முடியும் என்று தகவல் தொழிநுட்ப நிறுவக முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின்மூலம் இலங்கை மாணவருக்கு பயிற்சிப் பாடவிதானத்தையும் கல்வி நெறியை அமைப்பதிலும் தள வடிவமைப்பு என்பவையும் பயிற்றுவிக்கப்படவுள்ளது என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-03)

# குடும்பபெண்ணின் தாலியை களவாடிய திருடர்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஆலடிப்பகுதியில் வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் குடும்பப்பெண் ஒருவருடைய ஐந்தரைப்பவுண் தாலியை களவாடிச் சென்றுள்ளதாகப்புகார் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது; வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் தாலியை அறுத்துக்கொண்டு தப்பி ஓடியதாகவும் மனைவியின் அலறலைக்கேட்டு கண்விழித்தகணவன்திருடர்களைத்துரத்திச் சென்ற போதிலும் திருடர்கள் அகப்படாது தப்பிவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இத்திருட்டு தொடர்பாக சந்தேக நபர்கள் இருவர் அவ்வூர் மக்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

ஊரடங்கு அமுலில் இருப்பது திருடர்களுக்கு சாதகமாக இருப்பதாக மக்கள் பலரும் விசனம் அடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

(க-02)

# க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு இம்முறை ஆங்கில பாடப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

இவ்வருடம் ஆவணிமாதம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரம் பரீட்சைக்கு ஆங்கில வினாத்தாள் 1, பொது ஆங்கில வினாத்தாள் 2 ஆகிய இரு அலகுகளிற்கும் மாணவர்கள்விடையளிக்க வேண்டுமென களனிப்பல்கலைக்கழக ஆங்கில பகுதித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவற்றில் அலுவலகப் பாவிப்புக் கானஆங்கிலம், சமூகத் தேவைக்கான ஆங்கிலம் என இரண்டும் அழைக்கப்படும். பொது ஆங்கிலம் பகுதி2 இல் இதற்கானமாதிரி வினாத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**வினாத்தாள் 1**

இலக்கணம் -30 புள்ளிகள் சுருக்குதல் -20 புள்ளிகள், கிரகித்தல்[வாசிப்பு]-30 புள்ளிகள், சாதாரண தேவைகட்கு எழுதுதல் -20 புள்ளிகள், மொத்தம்- 100 புள்ளிகள்

**வினாத்தாள் 2**

கட்டுரை-20 புள்ளிகள், சொற்தொகுதி-30புள்ளி, சம்பாஷனை-20 புள்ளி, கிரகித்தல்[கேட்டல்]30 புள்ளிகள், மொத்தம்-100 புள்ளிகள்.

இப்பரீட்சையின் தனிச்சிறப்பு என்னவெனில் இதில் ஒலிபரப்புச்சாதனங்கள் சேர்ந்தபரீட்சையும் உள்ளடங்கும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சில வினாக்களை குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபரப்பும் மாணவர் அவற்றை உள்வாங்கி அதற்கான விடைகளைப் பரீட்சை மண்டபத்தில்எழுதுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# இருவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதிப் பகுதியில் இராணுவ வாகனம் மோதியதில் மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இல 21 மத்தியூஸ் வீதி, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த பிரான்சியஸ் அருளானந்தம் (வயது-65) வேதநாயகம் அலோசியஸ் தேவராசா (வயது-45) யாழ்ப்பாணம் ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

(க-10)

# வீதி திருத்தம்

(ஊர்காவற்றுறை)

வேலணைப்பிரதேச சபையின் கீழ் அமைந்துள்ள நயினாதீவில் உள்ள பள்ளிவாசல் வீதி திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(செ-75)

# கொழும்பில் இடம்பெறும் மேதினக் கூட்டங்கள்

(கொழும்பு)

பிரதான அரசியல் கட்சிகளின் மேதினத்தை முன்னிட்ட கூட்டங்கள் இம்முறை கொழும்பிலேயே நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் கோட்டையில் ஆரம்பமாகி கம்பல் மைதானத்தில் முடிவடையும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டம் கட்டுநாயக்காவிலும் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டம் வெள்ளவத்தையிலும் இடம்பெறவுள்ளது.

இதேபோன்ற 10 மேதினக் கூட்டங்கள் கொழும்பில் நடைபெறவுள்ளது என அரசியல் கட்சிவட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

(க 7)

# தமிழ் மக்களை அழிப்பதே அரசின் திட்டம்

## சாடுகிறார் ரெலோ எம்.பி

(கொழும்பு)

தமிழ் மக்களை அழிப்பதற்கான ஸ்ரீலங்கா அரசின் திட்டமே தற்போதைய படைநகர்வின் முக்கிய நோக்கமென்று ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கடந்த நான்கு மாதமாக யுத்த நிறுத்த அறிவிப்பை மேற்கொண்டு தமது சமாதான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியபோதும் அரசாங்கம் அதனை கவனத்தில் எடுக்க தவறிவிட்டதென அவர் மேலும் கூறியுள்ளார்.

(க)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில்

# சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு புனரமைப்புக் குறித்து வலியுறுத்து

[கல்வயல்]

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர் தொகை வெகுவாக அதிகரித்து வருவதால் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு நவீன வசதிகள் ஏற்படுத்தப்படல் அவசியம் என்று பொது மக்கள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவு, வைத்திய பரிசோதனைப் பிரிவு ஆகியன இயங்கி வருவதை ஒட்டி நோயாளர் தொகையும் அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதே வேளையில் இங்கு கடமையாற்றும் ஊழியர் தொகை குறைவாகக் காணப்படுவதால் நோயாளர் உரிய வேளையில் சிகிச்சை பெறுவது கடினமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை முன்பு இயங்கிய கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்திலேயே செயற்படுவதால் கட்டட வேலைகள் மேற்கொள்வதும் இயலாத ஒன்றாக காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்று சமூக நலன் விரும்பிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(க)

## இன்று ஒரு தகவல்

# பூமியில் சொர்க்கம்

ஒருநாள் பெரியவர் ஒருவர் வந்தார். அவர் தியானம் செய்யும் வழக்கமுள்ளவர். ஒருபெரிய சந்நியாசியுடன் தொடர்பு கொண்டவர். அவரிடம் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தேன், அவரிடம் நான் 'என்னசார்... உலகம் முழுவதும் எங்கே பார்த்தாலும் சண்டை, சச்சரவாகவேயிருக்கிறது. எதிர்காலத்தில் மனிதன் நிம்மதியாகவே வாழமுடியாதுபோல் இருக்கிறதே' என்று கூறினேன்:

'அதற்கு யார் காரணமென்று நினைக்கிறீர்கள்?' என்று அவர் என்னைக் கேட்டார். 'தெரியவில்லையே' என்றேன், அவர் 'மனிதன் தான் காரணம்' என்றார், மேலும் அவர் 'மனிதன் மனம் வைத்தால் இந்தப் பூமியையே சொர்க்கமாக மாற்ற முடியும் சார்! இது ஏதோ பேச்சுக்காக சொல்லும் வார்த்தை இல்லை, நிஜம்' என்றார், ஆர்வமாக அவர் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க ஆரம்பித்தேன். அவர் சில விஞ்ஞான உண்மைகளைக் கூறினார்.

ஒரு சோதனை நடந்ததாம். ஒரே மாதிரியான இரண்டுதோட்டங்கள். அவற்றில் ஒருதோட்டத்தில்அங்கேயிருந்த தோட்டக்காரர் செடி கொடிகளை மிகவும் அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொண்டாராம். அதே தோட்டக்காரர், இன்னொரு தோட்டத்திலுள்ள செடி கொடிகளை, மிகவும் வெறுப்பாகவும், எரிச்சலாகவும் கவனித்துக் கொண்டாராம்.

அன்பாகவும், கனிவாகவும் கவனித்து வந்த செடி கொடிகள். சீக்கிரமாகவும், வலுவாகவும் வளர்கிறதாம். வெறுப்பாகக் கவனித்துவந்த தோட்டம் அந்த அளவுக்கு வளரவில்லையாம், ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

இன்னொரு சோதனை. ஒரு தோட்டத்திலிருந்த தோட்டக்காரருக்கு ஒரு பெரிய கத்தரிக்கோலை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு தேவையில்லாத கிளைகளை வெட்டி ஒழுங்கு படுத்தும் வேலை. இந்தத் தோட்டக்காரர் ஒரு நாள் தன்னுடைய நண்பரைப் பார்ப்பதற்காக மற்றொரு தோட்டத்திற்குச் சென்றார். இவர் அங்கே சென்றவுடனே அங்கேஇருந்த சிலநுட்பமான செடிகள் 'இவர் தங்களை வெட்டுவதற்காகத்தான் வருகிறார்' என்பதுபோல் தங்கள் இலைகளைச் சுருக்கிக் கொள்ள ஆரம்பித்ததாம்.

இதிலிருந்து மனிதனுடைய எண்ண அலைகள் இன்னொரு பொருளையும் பாதிக்கும். பாதிக்கிறது என்ற ஓர் உண்மை தெரிய வருகிறது. ஒரு தனிமனிதனுடைய எண்ணம்-சொல்-செயல் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது திட்டவட்டமான ஓர் உண்மை. எல்லோரும் நல்ல எண்ணங்களையேநினைத்தால் உலகில் நன்மைகள் பெருகும். தீமைகள் குறையும், சரி! நல்ல எண்ணம் என்பது என்ன?

இயற்கையின் விதிகளைப் புரிந்துகொண்டு அதை மீறாமல் அதனுடன் ஒத்துப் போகும் எண்ணம் தான் நல்ல எண்ணம். நமது வாழ்க்கை ஒரு சங்கிலித் தொடர் போன்று உணர்வுபூர்வமாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஒருவரின் உடலுக்கோ-மனதுக்கோ ஏதோ ஓர் அதிர்ச்சியால் பாதிப்பு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; அது அவருக்கு இரத்த சம்பந்தமான அல்லது கடமை சம்பந்தமுள்ள மற்றவர்களின் உடம்பிலும், மனதிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இயற்கையின் இந்த விதிமுறையின்படி தான் எண்ண அலைகள் அடுத்தவரைப் பாதிக்கிறது. ''வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்பது வெறும் திண்ணைப் பேச்சு இல்லை. அதுஒருவிஞ்ஞானபூர்வமான. உண்மை, திட்டவட்டமான ஓர் உண்மை. இப்படி இவ்வளவு விஷயத்தையும் என்னைப்பார்க்க வந்த அந்தப் பெரியவர் விபரமாக எடுத்துக் கூறினார். அவர் இன்னொன்றும் சொன்னார். ''இந்த விஞ்ஞான உண்மைகளையெல்லாம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் - குறைந்தது மூன்றாவது வகுப்பிலிருந்தாவது - குழந்தைகளுக்குப்போதித்தால் எதிர்காலத்தில் நல்ல விதமான எண்ண அலைகள் இந்தப் பிரபஞ்சத்தில் பரவும். அதன் பிறகு இந்தப் பூமியேசொர்க்கம் ஆகும்'' என்றார். இது சிந்திக்க வேண்டிய ஒரு விஷயந்தான்.

உலக சமாதானத்திற்காக அணு ஆயுதங்களைக்குறைக்க வேண்டும் என்று ஒரு பக்கம் முடிவு செய்தாலும், குழந்தைகளை நல்ல விதமாக நாம் வளர்க்க வேண்டும், என்பதும் ஒரு முக்கியமான விஷயம். அதை யாரும் மறுக்க முடியாது.

தென்கச்சி சுவாமிநாதன்

# பிரதிக்கல்விஅமைச்சரின் அவசர வேண்டுகோள்

[கொழும்பு]

பழைய கசப்பான அனுபவங்களை மறந்து தமிழரும், முஸ்லிம்களும் இணைந்து வாழ வேண்டும்; இதற்கு இரண்டுஇனமும் ஒத்துழைக்க வேண்டுமென பிரதிக்கல்வி அமைச்சர்ஏ.எல்.என்.அத்தாவுல்லா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; கடந்த காலங்களில் எதிர்பாராத பிரச்சினை காரணமாக இரண்டு இனமும் பிரிவுபட்டு வாழ்கிறோம். இதனால் எம் இருவருக்கும்தோல்வியே நாம் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளாக வாழவேண்டுமென உறுதிபடத் தெரிவித்துள்ளார். [க-07]

# மருதங்கேணி வீதி திருத்தும் பணி ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

பதினைந்து வருடங்களிற்கும் மேலாக திருத்தஞ் செய்யப்படாதிருந்த வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பருத்தித் துறைவீதி திருத்துவதற்கான ஆயத்தங்கள் செய்யப் படுகின்றன.

நீண்டகாலங்களாக இவ் வீதி திருத்தஞ் செய்யப்படாதிருந்ததனால் இவ் வீதியால் பயணஞ் செய்த வாகனங்களும், பாதசாரிகளும் பெருஞ் சிரமங்களுக்குள்ளாகி வந்தனர்.

விரைவில் வீதிதிருத்தப்பட்டு விட்டால் சிரமங்கள்குறைந்து விடும் என எதிர்பார்க்கப் படுகிறது. [செ-43]

## இனப்பிரச்சினைவிவகாரம்

# புலிகளின் நிலைப்பாடு குறித்து - சிங்களமக்களுக்கு தெரியப்படுத்துக

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று மன்னார் ஆயர் அதிவண இராயப்பு யோசப் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதாகவும் அது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் தெரிவித்து அதற்கான நடவடிக்கை எடுப்பதாக தமிழ்ச்செல்வன் கூறினார் என்று வன்னி சென்று திரும்பிய ஆயர் மன்றம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த24ம்திகதிஇக்குழுவினர் இராணுவக்கட்டுப் பாடற்ற வன்னிக்குச்சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்து விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை சந்தித்துவிட்டுகொழும்பு திரும்பியது தெரிந்ததே.

ஆயர் மன்றத்தின் வன்னி நிலைமை குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் அன்றாட பிரச்சினைகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளது.

போதியளவுஉணவு மருந்து வகை இன்மை மலசல கூட வசதிகள் இன்மை போக்குவரத்து, மின்சாரம் போன்றவை இல்லாததனால் தினமும் அவர்கள் சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இப் பிரச்சினைக்கு சமாதான பேச்சின் மூலமேதீர்வு காணவேண்டும் என்றும் இரு சாராரும்யுத்தநிறுத்தம்கடைபிடித்த சமாதான பேச்சிற்கு உகந்த சூழ்நிலையினை உருவாக்கவேண்டு மென அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [ம]

# மக்கள் விசனம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மீன்பிடி உத்தியோகத்தர்கள் வருவதில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வாரத்தில் இரண்டு நாட்களாவது இப்பகுதிக்கு வருகை தந்து மக்களைச் சந்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [செ-43]

# இராசி பலன்

30-4-2001

(சித்திரை 17, திங்கள்)
சப்தமி மு.ப 11.37 வரை
பூசம் மு.இ 10:33 வரை
இராகுகாலம் 7.28- 8.58
நல்லநேரம் 11.58- 1.28

**மேடம்**
உஷ்ண வியாதி, தன்னம்பிக்கைக் குறைவு. மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்.

**இடபம்**
காரியம்கைகூடும், அந்நியர் சந்திப்பு, பிரயாணம், இனிய சம்பவம்.

**மிதுனம்**
விதண்டாவாதம், மதிப்புக்குறைவு, பொருள்விரயம், காரிய தாமதம்.

**கடகம்**
நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, செல்வாக்கு, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
அலைச்சல், மனக்கிலேசம், சயனசுகக் குறைவு, பணச் செலவு.

**கன்னி**
தனலாபம், மனச்சந்தோசம், காரியம் கைகூடும், அதிகாரிகள் வெறுப்பு.

**துலாம்**
முயற்சி வெற்றி, சுப நிகழ்ச்சி, நல்ல செய்தி, தொழில் நன்மை.

**விருச்சிகம்**
அச்சமான நிலை, புதிய திட்டமிடல், பிரயாணம், காரிய அனுகூலம்.

**தனுசு**
வியாதி, எதிர்பாராத பிரச்சினை, நல்ல உணவு கிடைத்தல், காரிய தடங்கல்.

**மகரம்**
களஸ்திரசுகம், பிரயாணம், முயற்சி நன்மை, திடீர் சந்திப்பு.

**கும்பம்**
சந்தோசமான நிலை, காரிய அனுகூலம், பகைவர் விலகுவர், நோய்குணமடையும்.

**மீனம்**
குடும்பக் கவலை, வியாபாரச் சிறப்பு, காரிய தாமதம், வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

# சித்திர ஆசிரியர்களுக்கு 10 ஆம் திகதி கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வலயப் பாடசாலைகளில் சித்திரப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல் வழங்குவதற்கான கூட்டம் ஒன்று எதிர் வரும் மே மாதப் 10 ஆம் திகதி, யாழ் இந்துமகளிர் கல்லூரியில் யாழ்.கோட்ட ஆசிரியர்களுக்கும்,

11 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில், கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கும், நடைபெறவுள்ளது.

இக் கூட்டங்கள் பி ப 1 00 மணிக்கு நடைபெறவுள்ளன.

சித்திர பாட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விபடணிப்பாளர் திருமதிசெ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். [செ-10]

# ஆறுபேர் வெட்டிக்கொலை ஒரே குடும்பத்தவராம்

(கொழும்பு)

ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கண்டதுண்டமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தெடாக்க வல்ல புல்லே வித்த பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 1 30 மணியளவில் இடம் பெற்றிருப்பதாக அப்பகுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இச்சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-07)

# வீட்டைக் கொளுத்திய திருட்டுக்கும்பல்

(கொழும்பு)

மாதம்பிட்டிப்பகுதியில் வீடு ஒன்றில் புகுந்த திருடர் குழு ஒன்று திருடியபின் வீட்டை கொளுத்திச் சென்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது. வீடு ஒன்றில் சகோதரிகளான இரண்டு யுவதிகளும் ஒரு சிறுமியும்தங்கியிருந்தனர்.

அந்தவேளை வீட்டில் நுழைந்த திருடர் அங்கிருந்த மூவரையும் கட்டிவிட்டு பொருட்களைத்திருடியபின் வீட்டைத் தீவைத்து கொளுத்தி விட்டுச் சென்றனர்.

கட்டப்பட்ட நிலையிலிருந்த மூவரும் கத்திக் கூக்குரலிட்டதைத் தொடர்ந்து அருகில்உள்ளவர்கள் அவர்களைக் காப்பாற்றினர்.

இவர்களில சிறுமி மட்டும் தீயில் எரிந்த நிலையில் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களை கைது செய்து விசாரித்த வேளை அதில் ஒருவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடிவந்தவரென்பது தெரியவந்துள்ளது. [க-7]

# பொ. ஜ. ஐ. மு. அரசு ஜூனிற்குமுன் கவிழும் ஐ. தே. க. எம்.பி. தெரிவிப்பு

[கொழும்பு]

எதிர்வரும்ஜூன்மாதத்திற்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு விடும்என ஐக்கியதேசியக்கட்சியின்பாராளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

ஐ.தே.கட்சிக்குள் தலைமைத்துவத்திற்கு போட்டியில்லை, மாறாக அரசாங்கத்தை மாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடயத்திலேயே கருத்து முரண்பாடு காணப்பட்டது.

அதுவும் தற்போது தீர்க்கப் பட்டுவிட்டது. தொடர்ந்து அரசாங்கத்தை மாற்றுவதற்காக ஐதே கட்சி முழு முயற்சியுடன்ஈடுபடும்எனவும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-2)

# பரம்பரையில் கண் பார்வையற்றவர்கள் பூரணமான பார்வையைப் பெறமுடியும்

## பரீட்சார்த்தமுயற்சி வெற்றிஎன்கிறார்கள் அமெ. நிபுணர்கள்

(வாஷிங்டன்)

மரபணுக் காரணங்களினால் பரம்பரையிலேயே கண் பார்வை அற்றவர்களும் கண் பார்வையை பெறும் பொருட்டு அவ்வாறு பாதிக்கப்பட்ட நாய்க்குட்டிகளில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட மரபணுச் சிகிச்சை முறை வெற்றி அளித்துள்ளதாக அமெரிக்க அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாய்க் குட்டிகளில் பரம்பரைக் கண்வியாதிக்கு காரணமான தவறான மரபணுவைக் கண்டுபிடித்து அவற்றின் வலது கண்ணில் ஆரோக்கியமான மரபணுவை ஊசி மூலம் செலுத்தும் ஜீன் சுரப்பி எனப்படும் மரபணுச் சிகிச்சை முறையின் பின் சில மாதங்களில் நாய்க்குட்டிகள் தமது வலது கண்ணால் பார்க்கக் கூடியதாக இருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழக அறிவியலாளர்களே இச் சிகிச்சை முறையில் வெற்றி பெற்றவர்களாவர்.

இதன் மூலம் பரம்பரையிலேயே கண்பார்வையற்ற மனிதர்களும் கண்பார்வையைப் பெறலாம் எனத்தாம் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் முயற்சி வெற்றி பெறும்பட்சத்தில் ஏராளமானோர் கண்பார்வையை பெறவாய்ப்பு ஏற்படும் என்றும் மருத்துவ உலகின் மகத்தான சாதனை இதுவென்றும் மருத்துவவியலாளர் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-2)

## அமெரிக்க வர்த்தகர் விண்வெளிக்குப் பயணம்

### 'நாஸா'வின் எதிர்ப்பையும் மீறியாம்

(மொஸ்கோ)

முதலாவது மனிதனை விண்வெளிக்கு அனுப்பிய ரஷ்யா இப்பொழுது 'விண்வெளியில் உல்லாசப் பயணம்' எனும் புதிய அத்தியாயத்தின்கீழ் டெனிஸ டிற்றோ எனும் அமெரிக்கரான கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரை அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான நாஸாவின் கடும் எதிர்ப்பின் மத்தியிலும் விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

விண்வெளி வீரர் அல்லாத ஒருவர் விண்வெளிக்கு செல்வதானது உபகரணங்களுக்கும் மற்றும் உயிர்களுக்கும் சேதமேற்படுத்தலாம் எனவும் தற்போது விண்வெளி நிலையத்தில் கணனிகளில் கோளாறு ஏற்பட்டுள்ளது எனவும் காரணங்காட்டி கடைசி நிமிடம்வரை நாஸா பயணத்தைத் தடைசெய்ய முயற்சித்திருந்தது.

ஆயினும் 20 மில்லியன் டொலர் செலவிட்டு இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்களுடன் முதியவரான டெனிஸ் டிற்றோ விண்வெளிக்கு புறப்பட்டுச் சென்றுள்ளதாக ரஷ்ய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-02)

# அரச ஆதரவை நாடுவதில் அதிர் பாஞ்சா தீவிர முனைப்பு

## பிரதமருடனும் உரையாடினார்

(புதுடில்லி)

திருநாமல் காங்கிரஸ் அதிருப்திக்கு குழுத்தலைவர் அதிர் பஞ்சா பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதுபற்றி பத்திரிகையாளர் ஒருவர் நீங்கள் பாரதிய ஜனதாக்கட்சியில் சேர இருந்தீர்களா அல்லது புதிய கட்சி அமைக்க இருக்கிறீர்களா என்று கேட்டதற்கு இல்லையென்று பதிலலித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில்; இந்திய உள்துறை அமைச்சர் அத்வானியுடன் தான் உரையாடியிருப்பதாகவும் அரசாங்க் கட்சிப்பகுதியில் தனக்கு இடம் ஒதுக்கித் தரும்படி கேட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்கு வங்கத்தில் அமைதியாகத் தேர்தல் நடைபெற வேண்டுமென்றும் புதிய அபிவிருத்தி பற்றி தான் பிரதமருடன் உரையாடியதாகவும் பாஞ்சா தெரிவித்தார் (து)

# தொடர்ந்து இடம்பெறும் கைதுகள் மே தினத்தை ஒட்டிய ஏற்பாடாம்

[இஸ்லாமாபாத்]

ஜனநாயக அமைப்புகள் மே தினம் கொண்டாட எடுக்கும் முயற்சியை பாகிஸ்தான் அரசு தடை செய்வதை சர்வதேச மனித உரிமை அமைப்பு வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

பாகிஸ்தானில் மேதினத்தை கொண்டாட முனைபவர்கள் கடந்த சில தினங்களாகக் கைது செய்யப்பட்டு வருவதும் துன்புறுத்தப்படுவதும் சாதாரணமாகிவிட்டது. இராணுவ ஆட்சியாளர்களே இதனைச் செய்விப்பதாகவும் ஜனநாயக வழியில் இயங்கும் அமைப்புகள், கட்சிகள் மேதினத்தைக் கொண்டாடமுடியாத நிலையில் இருப்பதாகவும் மனித உரிமைகள் அமைப்பு பாகிஸ்தான் இராணுவ அரசு மீது கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவ அரசு இரண்டாயிரத்துக்கு அதிகமான தொண்டர்களை கைது செய்துள்ளமையால் தலை நகரிலும் மற்றும் முக்கிய நகர்களிலும் பதட்ட நிலையேற்பட்டுள்ளது. [து]

## ஜோர்ஜ் புஷ்சின் கூற்றுக்கு சீனா கடும் கண்டனம்

(பீக்கிங்)

தாய்வானை ஆதரித்து சீனாவிற்கு எதிராகக் களம் இறங்குவோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஷ் புஷ் கூறியுள்ளமையை சீனா வன்மையாகக் கண்டித்துள்ளது.

தாய்வானுக்கு அதிநவீன ஆயுதங்களை விற்கப்போவதாக அமெரிக்கா கூறியதையும் கண்டித்த சீனா தாய்வான் எனும் சிறிய தீவை ஆயுதக் கிடங்காக்கி அந்நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்ல அமெரிக்கா திட்டம் திட்டியிருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இதேசமயம் தாய்வானுக்கும சீனாவிற்கும் இடையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் தாய்வான் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு வருடத்திற்கு முன்னர் இவ்விரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்று முறிவடைந்த பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்க வைப்பதில் தாய்வான் முனைப்பாகவுள்ளது. இம் முயற்சியின் மூலமே இரண்டு நாடுகளுக்கிடையேயான உறவுகளைச் சீர்செய்ய முடியும் என தாய்வான் அதிபர் ஷென் ஷுயிபியான் கூறியுள்ளார். (செ-2)

## விரசத்தை தூண்டும் ஒளிநாடா வெளியீடு அமெ. கடும் கண்டனம்

(வாஷிங்டன்)

இளைஞர்கள் யுவதிகள் மத்தியில வன்முறையும், விரசத்தையும் தூண்டும் வகையிலான பாடல்களை அமெரிக்காவில் உள்ள இசை நிறுவனங்கள் வெளியிட்டுள்ளமைக்கு அமெரிக்க அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள ஒளிநாடாக்கள் இளம் வயதினரைக் கவரும் வகையில் தொலைக்காட்சிகளில் விளம்பரப் படுத்தப் படுகின்றன.

அமெரிக்க அரசின் வன்மையான கண்டிப்பை இந் நிறுவனங்கள் புறக்கணித்துள்ளதுடன் இவ்வாறான ஒளிநாடாக்களை தொடர்ந்தும் வெளியிடுவதிலேயே கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-3)

## சதாமின் பிறந்ததின நிகழ்வு

(பாக்தாத்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் தனது 64 வது பிறந்த நாளை இது வரையில் எவரும் கொண்டாடாதவாறு வெகு விமரிசையாக கொண்டாடியுள்ளார்.

இதேவேளை, இதுவரை காலமும் எங்கும் தயாரிக்கப் படாத பெரியளவிலான கேக் ஒன்றை வெட்டி அவர் தனது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார் (க-7)

## செய்திப்பரல்

★ பொலியாவில் அமெரிக்கசமாதானப்படைத் தொண்டர் ஒருவர் கடந்தவாரம்காணாமற் போயுள்வார் என வாஷிங்டன் அறிவித்துள்ளது.

★ கொபி அனான் ஐ.நா. செயலாளராக பதவியேற்பதை சீன அரசு ஆதரித்துள்ளது.

★ அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சராக ஜேம்ஸ் கெல்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

★ அமெரிக்காவில் கடந்த ஆறு ஆண்டுகளில் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

## உலக தரிசனம்

# பதினொரு சடலங்கள் மீட்பு

(பொஜோரா)

கொலம்பியா படையினர் இடது சாரி தீவிரவாதிகளின் முகாம்களிலிருந்து 11 சடலங்களை மீட்டுள்ளனர்.

காட்டுப் பகுதி ஒன்றில் இடது சாரி தீவிரவாதிகளின் பாரிய புதைகுழி ஒன்றிலிருந்தே தலையில் காயம் பட்ட நிலையில் இச் சடலங்கள் மீட்கப்பட்டன.

போதை வஸ்து கடத்தல் பற்றி தகவல் அறிந்ததை யிட்டு அங்கு பாரிய தேடுதல் நடத்தியபோதே இச்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

திட்டமிட்டு செய்யப்பட்ட கொலையே இச்சம்பவத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (க-7)

## 6 யூதர் கடுங் காயம்

(ஜெருசலேம்)

பலஸ்தீனர் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் 6 யூத குடியேற்றவாசிகள் கடுங் காயத்திற்குள்ளாகியுள்ளனர்.

தெற்கு காஸாப்பகுதியில் சனிக்கிழமை மாலை இஸ்ரேல் பலஸ்தீன வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் காஸாப்பகுதிக்குச் சென்ற வேளையிலேயேஇச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (க-7)

## டில்லியில் பூமியதிர்ச்சி

(புதுடில்லி)

இந்தியாவின் தலைநகர் டில்லியிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் நேற்று முன்தினம் காலை8.15 மணியளவில் சிறியபூமி அதிர்ச்சி ஒன்று இடம்பெற்றது.

இப் பூமி அதிர்ச்சியால் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லையாயினும் பெரிய பூமி அதிர்வு ஏற்பட வாய்ப்பு நிலவுதாக புவியியல் நிபுணர்கள் பலர்கருத்து வெளியிட்டதையடுத்து அப் பகுதியில் பலத்த பதற்றம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-7(

# இந்தியப் பொருளாதாரம் மேலும்எட்டுவீதம்உயரும்

## செலாவணிநிதியம்தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா விரைவில் பொருளாதாரத்தில் 8% வளர்ச்சி கண்டுவிடும் என்றும்சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் சர்வதேச செலாவணி நிதிய மேலான் இயக்குநர் ஹெர்ச்கோலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மத்தியில் மேலும் அவர் தொடர்கையில், இந்தியா பொருளாதார அமைப்பு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியுள்ளது என்றும் இந்தியப் பொருளாதாரம் மிகவும் உறுதியானது, நிலையானது என்றாலும் வறுமையை ஒழித்திட அதிக வளர்ச்சி வீதம் காண வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார். (து)

# அழகு ராணி போட்டியில் வெற்றி பெற்றவர் பெண்

## சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

(பாரிஸ்)

பிரான்சில் அண்மையில் நடைபெற்ற அழகு ராணிப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற பெண் ஆணாக இருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

எலொடி கூஸின் (வயது-19) என்ற இந்தப்பெண் பிறக்கும் போது ஆணாகப் பிறந்தவர். பின்னர் சத்திர சிகிச்சைமூலம் தன்னை பெண்ணாக மாற்றிக் கொண்டார் என்ற "நியூயோர்க்.டெய்லி" என்ற பத்திரிகையில் பிரசுரமான செய்தி தவறானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரஸ்தாப பெண் 'நியூயோர்க் டெய்லி' என்ற பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்யக் கூடும் என சர்வதேச அவதானிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-7)

சிறு காப்பிற் பேரிடத் தாகி
உறுபதை ஊக்கம் அழிப்பது அரண்
- குறள்

# வலம்புரி

## இன்று போய் நாளை வருக!

இராமாயணத்தில் போர் நடந்து கொண்டிருக்கிறது. இராவணன் தன்னிடமுள்ள ஆயுதங்களையெல்லாம் இழந்து வெறுங்கையோடு நிற்கிறான். எதிரே நிற்கும் இராமனின் கையிலுள்ள கோதண்டம் பொறுமையை இழந்து இராமா என்னை ஒரு கணம் பயன்படுத்து இராவணனுக்கு பாடம் புகட்டுவேன் என்பதுபோல் உன்னுகிறது.

மனைவியை இழந்த இராமன் போர்க்களத்திலும் கலங்காது இராவணனைப் பார்த்து ''இராவணா இன்று போய் போருக்கு நாளை வா'' என்று கூறுகிறான் இராமன்காட்டிய அன்பை சமாதானத்தின் வெளிப்பாட்டை இராவணன் உணர்ந்திலன்.

சண்டைசெய்வதென்றே முடிவெடுத்தான் முடிவெடுத்த இராவணன் மாண்டால் பரவாயில்லையே ஏதுமறியாத - போர் வேண்டாமென்ற அவனது படைகள் எல்லாம் அழிந்தன. இராமபாணத்தின் வேகத்தால் நிலைகுலைந்து களம் விட்டு ஏவின.

இராவணனுக்கு இராமன் கூறிய ''இன்றுபோய் போருக்கு நாளை வா'' என்பதன் பொருளை உணர முடியவில்லை,

இலங்காபுரியை அக்கினிச்சுவாலை பதம் பார்த்தது.

இஃது இதிகாசக் கதையாயினும் இலங்கைக்கு இப்போது மிகமிகப் பொருத்த முடையதாக வுள்ளது.

விடுதலைப்புலிகள் நான்கு மாதகால யுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக அறிவித்தார்கள் அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை இதனால் புலிகள் தமது யுத்த நிறுத்தத்திற்கு நீடிப்பைவழங்கவில்லை.

ஆனால் அரசு இராவணன் கொண்ட மமதையில் நின்று அக்கினிச் சுவாலை - படை நடவடிக்கையை ஆரம்பித்தது.

புலிகள் யுத்தத்தில் பலயீனமடைந்துவிட்டார்கள் என நம்பியிருந்த அரசுக்கு புலிகள் வழங்கிய பதிலடித் தாக்குதல் வெறுங்கையோடு களம் புகும் நிலையைத் தோற்றுவித்தது.

என் செய்வது நான்கு மாதகாலம் மகிழ்வுடன் இருந்தபடையினரில் பலர் உயிரிழந்தனர். அக்கினி பற்றி எரிய முதலே சுவாலை எப்படி எழமுடியும் அக்கினியை எரிக்கும் அக்கினி எதிர்ப்பக்கத்திலிருந்ததால் கருகியோர் காணாமல்போனோர் அதிகமே.

# வாள்முனையை விட வலிமையுள்ள பேனா முனை

## வளர்ச்சி பெற்ற வரலாறு சிறப்புடையதே!

**ஆ. துரைக்கண்ணு**

உலகை ஆட்டிப் படைக்கும் வல்லமை பேனாவுக்கு உண்டு. அதனால் தான் 'பாரன்லிட்டன' என்ற ஆங்கிலக் கவிஞன், வாள் முனையை விடப் பேனா முனை வலிமை மிக்கது' என்று சொன்னான். பேனாக்கள் மிகவும் ஆபத்தான கருவிகள். வாட்களை விடக் கூர்மையானவை. சவுக்கடியை விடக் கடுமையானவை என்றார் ஜோன்டைலர்.

### அறிவின் நாக்கு

மேலை நாட்டினருக்கு ஆயுதமாகத் தெரிந்த பேனா, பாரதியாருக்கு தெய்வமாகக் காட்சியளித்தது: எழுதுகோல் தெய்வம். இந்த எழுத்தும் தெய்வம் என்று பாடுகிறார், பாரதி; 'அறிவின் நான்கு' என்று கருதப்படும் பேனா வளர்ந்த கதை சுவையானது. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு- எழுதுவதற்கு பொருள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதால்- உளிகளைக் கொண்டு கற்களில் எழுத்துக்களைச் செதுக்கினார்கள்: களிமண் பலகைகளில் விரலால் எழுதினார்கள்.

கி.மு. 1500 வாக்கில் 'பாபிரஸ்' என்ற நாணலில் காகிதம் போன்ற தாள்களை எகிப்தியர் தயாரித்தனர்: இதில் வண்ண திரவியங் கொண்டு சில வரிகள் மட்டுமே எழுத முடிந்தது. அப்போது எழுது கோலாகப் பயன்பட்டது- மூங்கில்குச்சி. இதுதான் மனிதனின் முதல் பேனா. இதன் பிறகு கூட- இரண்டாயிரம் ஆண்டு வரை- இதுவே பிரதான எழுது கோலாகத் திகழ்ந்தது. சீனர்கள் மட்டும் பிரஸ் கொண்டு எழுதினார்கள்;

### வாத்து இறகு

ரோம் சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பிறகு, பேனாவின் தேவை இன்றியமையாதது என்ற நிலை ஏற்பட்டது; ஐரோப்பாவில் பரவியிருந்த கிறிஸ்தவப் பாதிரியார்கள் மதக் கோட்பாடுகளை அறிவிக்க எழுதுகோல் தேவை என்பதை உணர்ந்தார்கள். அந்தக் காலத்தில் மூங்கில் குச்சிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்பொழுது பாதிரியார்களுக்குக் கைகொடுத்தது வாத்து இறகு. இதில் ஒரு முனையில் உள்ள இறகுகளை அப்புறப்படுத்தி விட்டு அதைக் கத்தியால் கூர்மைப்படுத்தி, பேனாவாகப் பயன்படுத்தினார்கள். இறகினைச் சீவப் பயன்படுத்தப்பட்ட கத்தியைப் 'பேனாக்கத்தி' என்று அழைத்தார்கள். இதனால் தான் இன்றும் சிறு கத்திகளைப் பேனாக்கத்தி என்று அழைக்கிறோம்.

தூர கிழக்கு நாடுகள்தவிர கி.பி. 600 முதல் 1830 வரை உலகெங்கிலும் இறகுப் பேனாக்கள் தான் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்காவின் மூன்றாவது ஜனாதிபதியான தாமஸ் ஜெபர்சன், இறகுப் பேனாக்களுக்காக மட்டுமே ஏராளமான வாத்துகளை வளர்த்ததாகச் சொல்லப்படுகிறது மூங்கில் பேனாவிலும் சரி, இறகுப் பேனாவிலும் சரி- இரண்டு முக்கிய குறைகள் இருந்தன ஒன்று ஒரு சில எழுத்துக்களை எழுதும் அளவுக்கு மட்டுமே அதன் முனையில் மை ஒட்டியது. இன்னொன்று முனை அடிக்கடி மழுங்கியது.

### உலோக நிப்பு

இந்தக் குறைகளைத் தீர்க்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 19 ஆம் நூற்றாண்டு வரை குறிப்பிடத்தக்க வெற்றி ஏதும் கிடைக்கவில்லை. 16 ஆம் நூற்றாண்டில் கட்டைகளில் உலோக நிப்புகளைப் பொருத்தி எழுதும் பழக்கம் தொடங்கியது. செல்வந்தர்கள் தங்கம், வெள்ளி ஆகியவற்றில் செய்த நிப்புகளைப் பரிமாறிக் கொண்டனர். இறகுப் பேனாவை விட்டு உலோ நிப்பில் ஓரிரு சொட்டு மை

→ 3ஆம் பக்கம் பார்க்க

# புதிய கல்விக் கொள்கை ஆரம்பத் திட்டமிடல்

## புதிய பாடசாலை அபிவிருத்தித் திட்டம்- 2001

**கலாநிதி தாரா டி. மெல் செயலாளர் கல்வி அமைச்சு**

**தமிழாக்கம் இளமதி**

பிரதேச செயலக ரீதியாக மாதிரிப் பாடசாலையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கல்வி அமைச்சு அதிபர்களுடன் சேர்ந்து நாடுபூராகவுமுள்ள 341 இனங்காணப்பட்ட பாடசாலைகளிலிருந்து 134 பாடசாலைகளைத் தெரிந்தெடுத்து விரைவுபடுத்தப்பட்ட திட்டம் ஒன்றின் அடிப்படையில் 2002 ஆம் ஆண்டு தரம் 1 இற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்கிறது.

தகவல் தொழில்நுட்பம், புதிய நூலகங்கள், விஞ்ஞான, ஆய்வு கூடங்கள் (க.பொ.த சாதாரண தர, உயர் தர) அறிமுகமும் முகாமைத்துவ, தலைமைத்துவ பயிற்சி அதிபர்கட்கு வழங்குவதும் இத்திட்டத்தில் அடங்கும்.

தெரிவு செய்யப்பட்ட சில அரச சார்பற்ற தனியார் துறை நிறுவனங்கள் இத்திட்டத்தில் விரைவுபடுத்த அமைச்சுக்கு உதவ முன்வந்துள்ளன:

### 54 மத்திய கல்லூரிகளை மீளமைத்தல்

கலாநிதி கன்னங்கராவின் இலவசக்கல்வி முறையை ஆரம்பிக்கும் போது தொடங்கப்பட்ட மத்திய கல்லூரிகள் பல பின்னாளில் பௌதிக வளங்களையும் தரமான உள்ளீடுகள் வழங்கப்படாமல் இருப்பதாலும் அவற்றை மீளமைக்க வேண்டிய நிலை உள்ளது. இப்பாடசாலை அதிபர்களுடன் சேர்ந்து 2001 இல் இவற்றை அபிவிருத்தி செய்ய ஒரு விரைவுபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலை அமைச்சு ஆரம்பித்துள்ளது:

### வடக்கு-கிழக்கு பாடசாலைகள்

கடந்தஇரண்டுதசாப்தங்கள் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பாடசாலைகளை வ.கி மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் சேர்ந்து புனரமைப்பு, புனர்நிர்மாணம் செய்ய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது:

### விசேட புனரமைப்பு

மேல், தென், மத்திய, ஊவா, சப்பிரகமுவா மாகாணப் பிரதேசங்களில் உள்ள 115 பாடசாலைகள் விசேட புனரமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் இவை தோட்ட கட்டமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும்;

### ஒரு புதிய முன்னோடி கனிட்ட பாடசாலைத் திட்டம்

கொழும்பில் 10 பாடசாலைகளும் கண்டி, காலி, குருநாகலையில் தலா ஐந்து பாடசாலைகள் வீதமும் இவை ஆரம்பிக்கப்படும். இவை ஏனைய பாடசாலைகட்கு ஒரு விரைவான அபிவிருத்திப் பாதையைக் காட்டக்கூடியனவாகவும் முதலாம் தரத்தில் பிரபல பாடசாலைகளில் இருக்கும் கவனத்தை இவை ஈர்த்து மாணவரை உள்வாங்கக் கூடியனவாகவும் அமைவதற்காக இனங்காணப்பட்டுள்ளன. இப்பாடசாலைகள் பௌதிக வடிவமைப்பு, தரமான உள்ளீடுகள், மனிதவள அபிவிருத்தி என்பவற்றைக் கொண்டிருக்கும்.

### நல்லெண்ணப் பாடசாலைகள் திட்டம்

சகல சமூகங்களையும் கொண்ட பிள்ளைகள் தமக்கு விரும்பிய மொழியில் கல்வி கற்க கொழும்பு, கண்டி ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் இவை ஆரம்பிக்கப்படும். இவை ஒரு நட்புறவுப் பாடசாலையாகவும் மூவினத்தின் இன ஒற்றுமையை வளர்க்கக் கூடியதாகவும் நடத்தப்படும். தேசிய ஒருமைப்பாடு இன விவகார அமைச்சுடன் இதற்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2002 இல் அனுமதி வழங்கக் கூடியதாக நடைமுறைப்படுத்தப்படும்;

### புலமைப் பரிசில்கள்

நடைமுறையில் உள்ள 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை மறுசீரமைக்கப்பட்டு 10 வயதுப் பிள்ளைகளுக்கேற்ப அதன் தராதரம் பேணப்படும்.

புதிய பாடசாலை மட்டக் கணிப்பீடு 2001 இல் தரம் 9 இலிருந்ததைப் போல இக்காலத்தில் ஆனால் சிறு பிள்ளைகளுக்கு மேலதிகச் சுமையைக் குறைக்க உதவும்;

ஜனாதிபதியின் புத்தாயிரமாண்டு க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான புலமைப் பரிசில்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை அவர்கள் இணைப் பாடவிதானம், விளையாட்டில் பங்கு பற்றியிருத்தல் வெகுமதிகள் அளிக்கப்படும். இது ஜனாதிபதி நிதியைக் கொண்டு வழங்கப்படும்;

### ஆசிரியர் கல்வி

புதிய ஆசிரியர் கல்விக் கொள்கைகளை தேசிய கல்வி நிறுவனம் ஊடாக அபிவிருத்தி செய்யப்படும்.

தேசிய கல்விக் கல்லூரி மூலம் முன் சேவைக் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உதவி பெறப்பட்டு ஆங்கில மொழி கற்பிக்கப்படும.

ஆசிரியர் கல்விநிலையங்கள் மூலம் முன் பயிற்சிகள், தொடர் கல்வி வழங்கப்படும் 2002 இல் 91 மாதிரிநிலையங்கள் நிறுவப்படும். புதிய ஆசிரிய இடமாற்றத்திட்டம் இப்போது தயாரிக்கப்படும். ஆசிரியர் நலன்புரிச்சமூகசேவை நிலையங்கள், கிராமிய ஆசிரியர்களுக்கான வசதிகள் என்பவற்றை விசேடமாக கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு-கிழக்கு மலையகத்தில் உள்ள தமிழ் பேசும் ஆசிரியர் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிபர் பயிற்சி அபிவிருத்தி செயல்படுவதுடன் தலைமைத்துவ முகாமைத்துவ பயிற்சிகளை அவர்கட்கு புதிய சிந்தனையுடன் வழங்கப்படுவதற்கு மீபோ Meepe) என்னுமிடத்தில் அதிபர் கல்விநிலையம் விரைவில் அமையவுள்ளது.

### இரண்டாவது தேசிய மொழியைக் கற்பித்தல்

தற்போது தமிழ் மாணவர்கட்குச் சிங்களமும் சிங்கள மாணவர்கட்குத்தமிழ்மொழியும் தொடர்பாடலுக்காக தரம் 3 இலிருந்து கற்பிக்கப்படுகின்றது. 2002 ஆம் ஆண்டிலிருந்து தரம் 1 மாணவர்கட்கு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

### தொழில் வழி காட்டல்

கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு, மூன்றாந்தர தொழில் கல்வி ஆணைக்குழு என்பன இணைந்து க.பொ.த. (சா/த), (உ/த) மாணவர்கட்கு அரச, தனியார் நிறுவன வேலை வாய்ப்புக்கள பயிற்சிகள என்பன பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கத்திட்டமொன்றை தயாரிக்கின்றன. விசேட தொழில் வழிகாட்டல் பிரிவு ஒன்றுஒவ்வொரு பாடசாலையிலும் கொத்தணிப் பாடசாலையிலும் சகல வலயங்களுக்குள்ளும் நிறுவப்படும்.

### பாடசாலை மட்ட நிர்வாகம்

பாடசாலை மட்ட நிர்வாகம் ஒரு முக்கியமான கல்விச் சீர்திருத்த நிலையாகும் அது பாடசாலைக்குபூரண அந்தஸ்தைக் கொடுக்கும் தற்போது 134 பாடசாலைகளில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

(3ஆம் பக்கம் பார்க்க

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1871)

# மேதினத்தை முன்னிட்டு முக்கியவீதிகள் மூடப்படும்

## பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நாளை இடம்பெறும் மேதின நிகழ்வுகளையொட்டி பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ் நகரின் முக்கிய வீதிகள் மூடப்பட்டிருக்கும் என்று யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யு.உம்முஹெலி அறிவித்துள்ளார்.

யாழ் இந்துமகளிர் கல்லூரி வீதி, கஸ்தூரியார் வீதி, யாழ் இந்துக்கல்லூரி வீதி, கனகசபை லேன் ஆகிய வீதிகள் காலை 10.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையும், நல்லூர் கோவில் வீதி, நாவலர் வீதிச் சந்தி வரை பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 3 00 மணி வரையும், மற்றும் நாவலர் வீதியிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக கோவில் பின் வீதி. ஆடியபாதம் வீதிச் சந்திவரைக்கும். மாலை3 30 மணி முதல் 4.00 மணிவரையும் மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதிகள் ஊடாக சைக்கிள் முதல் அனைத்து வாகனங்களும் பிரயாணம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. (இ-5)

---

புலிகளின்

- இசைவாணன் (கந்தசாமி தயாநிதி - யாழ்ப்பாணம்)
- மலர்ச்சேரன் (சின்னையா கிருஷ்ணகுமார்- திருகோணமலை)
- சுதிரவன் (கனகரத்தினம் சசிபிரதன் - யாழ்ப்பாணம்)
- வெற்றிநிலவன் (கோபால் ரவிச்சந்திரன் - விசுவமடு)
- சுஜீவன் / வல்லவன் (பொன்னுத்துரை சுதாகரன் - யாழ்ப்பாணம்)
- மலரினி (சோமஸ்காந்தன் சசிகலா - கிளிநொச்சி)
- அஞ்சலா (ஆறுமுகம் நிர்மலாதேவி - வவுனியா)
- வெண்ணிலா (வெற்றிவே சிவலட்சுமி - திருகோணமலை)
- ஜோதினி (இராஜசிங்கம் றெஜிந்தா - யாழ்ப்பாணம்)
- கவியரசி (திரவியம் கிருஷ்ணவேணி - யாழ்ப்பாணம்)
- மலரினி / பிரசன்னா (தங்கராசா சந்திரகலா - மன்னார்)
- சுகந்தி / மகிழினி (ஜெயக்குமார் உதயரூபினி - யாழ்ப்பாணம்)
- அன்பழகி (இரத்தினசிங்கம்பிரசாந்தினி - மல்லாவி)
- கலைத்தமிழ் (பழனிஆண்டி கிருஷ்ணகுமாரி- கிளிநொச்சி)
- புகழரசி (செல்லத்தம்பி அனோஜா - யாழ்ப்பாணம்)

எல்லைப்படை வீரர்களான,

- கோகுலரமனேஸ்வரன் (சண்முகம் கோகுலரமனேஸ்வரன் - திருகோணமலை)
- வினோதராஜன் (கந்தசாமி வினோதராஜன்- வட்டக்கச்சி)
- புவனேஸ்வரன் (முத்துராசா புவனேஸ்வரன்- மன்னார்)

இதேவேளை கடந்த 26ந் திகதி மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் ஏற்பட்ட மோதலில்

- சுதந்திரன் (துரைசிங்கம் சிவகுமார் -மன்னார்)
- தங்கரத்தி வானுகோபன் (தியாகுப்பிள்ளை அலேஸ்வரன்- யாழ்ப்பாணம்)

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [ந-5]

---

## பூநகரியில்...

பாதிக்கப்பட்டு நடைப்பிணங்களாக விரத்தியின் விளிம்பில் வாழ்ந்து வருகிறார்கள்.

இவ்வாறு பரிதாபகரமாக வாழும் மக்கள் வசிக்க இடமின்றி அகதி முகாம்களிலும் மரங்களின் கீழும் வாழ்கின்றனர். இந்நிலையில்அம்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களால் நாம் மிக மன வேதனையடைகிறோம். அத்துடன்யுத்தம்நடைபெறும் போதுசாதாரண காலங்களிலும் பொதுமக்களின் குடியிருப்பு மீது நடத்தப்படும் தாக்குதல்களை அரச படைகள் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோமென அவ்வறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது

---

## அக்கினிச்சுவாலை...

புலிகளின் பலத்த பதிலடித் தாக்குதலே காரணமெனக் குறிப்பிட்டதுடன், அரசாங்கம் செக் குடியரசிடம் கொள்வனவு செய்த ஆயுதங்கள்பற்றிய இரகசியம் பேணப்படாமையும் ஒரு காரணமெனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, 34 மாதங்களாக நடந்த ஜெயசிக்குறு பாரிய படை நடவடிக்கையுடன் ஒப்பிடும் போது அக்கினிச்சுவாலை படைநடவடிக்கையில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு அதிகம் என்றும் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார். [ந]

---

## சமாதான

யுத்தநிறுத்தம் ஒன்றை அறிவிக்காது, உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதே அன்று தொடக்கம் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்துவருகிறது.

பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படும் பட்சத்தில், யுத்தநிறுத்தத்தை செய்து கொள்ளமுடியும் என்று கடந்த வருடம் டிசம்பர் மாதம் அரசு வெளியிட்டிருந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதும் சமநேரத்தில் இராணுவநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அன்று தெரிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைஅடுத்து இனப்பிரச்சினை தொடர்பான சமாதான பேச்சுவார்த்தைக்கு நோர்வே அரசுடன் சகலவழிகளிலும் அரசு ஒத்துழைப்பு வழங்கிவந்தது. இந்த ஒத்துழைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒத்துவந்திருந்தனர்.

இந்நிலையில் தமிழ் மக்களின் துயரங்களைக்குறைப்பதற்காக மனிதாபிமான நடவடிக்கைகளை எடுப்பதற்குவசதியாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருந்தது.

இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளை விரைவாக ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருந்தபோதும் விடுதலைப்புலிகள் கடந்த 6ம் திகதி நோர்வேத்தூதுவர் வெஸ்பேர்க்குடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் புதிய நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், மனிதாபிமான நடவடிக்கைகளை அமுல்செய்வது தொடர்பாக நோர்வேயின் வெளிவிகார அமைச்சருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இக்கடிதத்தில் ஏப்பிரல் 11ம் திகதியளவில் பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமானயுத்த நிறுத்தம் அமுலில் இருந்த காலத்தில் 224 தடவைகள் அந்த யுத்தநிறுத்தத்தை அவர்கள் மீறியிருந்தனர் அத்துடன் மீண்டும் ஒரு பாரிய தாக்குதல் நடவடிக்கைக்காக யுத்த நிறுத்தத்தை அவர்கள் பயன்படுத்திக்கொண்ட முறை பற்றியும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

விடுதலைப்புலிகளின் இவ்வாறான தந்திரோபாய நடவடிக்கைகளால் அரசு ஒருபோதும் ஏமாறப்போவதில்லை.

யுத்தநிறுத்த நடவடிக்கைகள் அரசை நிர்ப்பந்திற்பதற்காக சர்வதேச சமூகத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் முயற்சிசெய்தது ஆனால் வெளிநாடுகளில் பல விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்து வருவதோடு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மட்டும் ஆதரவுதெரிவித்துள்ளன.

### இராணுவபலத்தை அதிகரிக்க வெளிநாடுகள் உதவி

இலங்கையின் இராணுவ பலத்தை அதிகரிக்கச்செய்வதற்கு வெளிநாடுகள் உதவுகின்றன. என்று விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைக்கும்குற்றச்சாட்டாகும்.

இறைமையுள்ள ஒரு நாட்டின் அரசாங்கம் தன்துபடைகளின் பலத்தை அதிகரிக்கும் உரிமை குறித்து கேள்வி எழுப்ப விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அருகதை கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தத்தை முடித்துக்கொண்ட விடுதலைப் புலிகள் கொழும்பு மற்றும் தெற்குப் பிரதேசங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துவருகின்றனர். யுத்தநிறுத்தம் அமுலில் இருந்தகாலத்தில் தன்னிச்சையாக இராணுவநடவடிக்கைகளையும் குண்டுத் தாக்குதல்களையும் இடைநிறுத்துவதற்காக விடுதலைப் புலிகள் கூறுவதன் மூலம் கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட தாக்குதல்களை அவர்கள் பொறுப்பேற்கிறார்கள் என்றும் ஊடகத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்

**நிரூ ராதிகாஸ் நகை மாளிகை**

189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1872)

**அரச பொதுச் சேவை**
**கல்வி சாரா ஊழியர் சங்கம்**
**யாழ். மாவட்டம் (கல்விப் பிரிவு)**

வண்ணை வைத்தீஸ்வரா பாடசாலையில் 29-04-2001 அன்று புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு

தலைவர்: க. விஜயகுமார்
செயலாளர்: இ. சிவபாதம்
பொருளாளர்: மு. தியாகேசன்
உபதலைவர்: செ. கோபாலகிருஸ்ணர்
உபசெயலாளர்: த. ஸ்ரீகாந்தராஜன்

நிர்வாகம்

(2957)

**வலம்புரியின்**
கவிதைக் குடும்ப அங்குரார்ப்பணமும்
**பரிசளிப்பு நிகழ்வும்**

தலைவர்: கவிஞர் சு. துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர்; உதவி ஆசிரியர் வலம்புரி)

காலம்: 01.05.2001 காலை 10 மணி
இடம்: வலம்புரி கேட்போர்கூடம்

பிரதம விருந்தினர்:
கவிஞர் கலாநிதி இ. முருகையன்

சிறப்பு விருந்தினர்கள்:
கவிஞர் கோ. சி. வேலாயுதம்
(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)
கவிஞர் இயல்வாணன்
(ஆசிரியர்)

வலம்புரியின் கவிதைக் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் தவறாதுகலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்

15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

யுத்தநிறுத்தம் ★ பேச்சுவார்த்தை ★ சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி

புதிய ஜனநாயக கட்சியும்
நவலங்கா தொழிலாளர் சங்கமும்
இணைந்து நடாத்தும்

புரட்சிகர
**மேதினக் கூட்டம்**

**01-05-2001 செவ்வாய்**
காலை 10-00 மணிக்கு
யாழ். ப. நோ. கூ. சங்க தலைமை மண்டபம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)

தலைமை:
தோழர் கா. கதிர்காமநாதன்
(வடபிரதேச செயலாளர், புதிய ஜனநாயகக் கட்சி)

உரையாற்றுவோர்:

தோழர்கள்:
சி. கா. செந்திவேல்
(பொதுச்செயலாளர், புதிய ஜனநாயகக்கட்சி)
கா. பஞ்சலிங்கம்
(நவலங்கா தொழிலாளர் சங்கம்)
த. தணிகாசலம்
(ஆசிரியர் "தாயகம்" தே: க: இ. பேரவை)

மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் உரையாற்றுவர்
கலைநிகழ்ச்சிகள் — நாடகம் புதியதோர் உலகம்
அனைவரையும் அழைக்கின்றோம்.

புதிய ஜனநாயக கட்சி
நவலங்கா தொழிலாளர் சங்கம்

(2958)

இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது